செ.வெ.எண்-37 நாள்-21.09.2020

# அரியலூர் மாவட்டம்
# தேசிய ஊட்டச்சத்து விழிப்புணர்வு வாகனத்தினை துவக்கி வைத்து, கர்ப்பிணித்தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து உணவு பொருட்களை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் வழங்கினார்கள்.

சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டத்துறையின் கீழ் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டத்தின் சார்பில் ஊட்டச்சத்து மாதத்தினை முன்னிட்டு, அரியலூர் நகராட்சி வளாகத்தில் தேசிய ஊட்டச்சத்து விழிப்புணர்வு வாகனத்தினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (21.09.2020) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் அமைக்கப்படிருந்த காய்கறி மற்றும் ஊட்டச்சத்து உணவு பொருட்கள் அடங்கிய கண்காட்சி அரங்கினை பார்வையிட்டு, கர்ப்பிணித்தாய்மார்களுக்கு சரிவிகித உணவுகள் அடங்கிய உணவு மற்றும் மருந்து பெட்டகங்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் வழங்கி, **‘ஆரோக்கியமான மக்களால் ஆனதே வலிமையான தேசமாகும்’** என்ற கையெழுத்து இயக்கத்தின்கீழ் கையெழுத்திட்டு, கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது,**

வருடந்தோறும் செப்டம்பர் 1 முதல் 30 வரை ஊட்டச்சத்து மாதமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சி மூலமாக ஊட்டச்சத்து அவசியம் குறித்து பொதுமக்களிடையே தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, நகராட்சி வாகனத்தில் ஊட்டச்சத்து உணவு பொருட்கள் தொடர்பான விபரங்கள், ஒவ்வொருவரின் இல்லங்களிலும் காய்கறி தோட்டம் அமைப்பதன் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பதாகைகள் அமைக்கப்பட்டு, ஒலிப்பெருக்கிகள் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது. எனவே, கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் பெண்கள் ஊட்டச்சத்தின் அவசியம் குறித்து தெரிந்துகொண்டு, தங்களது இல்லங்களை சுற்றிலும் காய்கறி தோட்டங்களை அமைக்க முன்வர வேண்டும். இதன் மூலம் கிடைக்கும் காய்கறிகளை தங்களது அன்றாட உணவு முறைகளில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, ஊட்டச்சத்து உறுதிமொழியினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் வாசிக்க, அனைத்து தாய்மார்கள், பொதுமக்கள் மற்றும் அரசு ஊழியர்கள் பின்தொடர்ந்து இந்தியாவில் உள்ள ஒவ்வொரு தாய் மற்றும் குழந்தையும் ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத ஆரோக்கியமான உடல்நிலையை அடைய நான் இன்று உறுதிமொழி ஏற்கிறேன். தேசிய ஊட்டச்சத்து மாதத்தில் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியம் சம்பந்தமான கருத்துக்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று சேர்வதை நான் உறுதி செய்வேன், ஆரோக்கியம் என்பது சரிவிகித சத்தான, ஆரோக்கிய உணவு, தூய்மையான குடிநீர், சுகாதாரம், தாய்மை மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கு சரியான உணவு ஊட்டும் பழக்க வழக்கங்களில் உள்ளது. தேசிய ஊட்டச்சத்து இயக்கம் நாடு முழுவதும் ஒரு மக்கள் இயக்கமாக மாற ஒவ்வொரு வீடு, ஒவ்வொரு பள்ளி, ஒவ்வொரு கிராமம், ஒவ்வொரு நகரமும் சம்மந்தமான கருத்துகளை அறிய நான் உதவுவேன். இந்த மக்கள் பேரியக்கத்தின் மூலம் எனது நாட்டிலுள்ள எனது சகோதரிகள், சகோதரர்கள் மற்றும் குழந்தைகள் சிறந்த ஆரோக்கியமானவர்களாகவும், திறமையானவர்களாகவும் உருவெடுப்பர் என்ற உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பொ.சந்திரசேகர், நகராட்சி ஆணையர் குமரன், ஒன்றியக்குழுத்தலைவர் செந்தமிழ்செல்வி, திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டம்) எம்.சாவித்திரி, வட்டார குழந்தை வளர்ச்சி அலுவலர் அன்பரசி மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**